HHE16-1-2

# எல்லா கிறிஸ்தவர்களும் எடுத்துகொள்ளப்படுவார்கள் என்பதற்கான வேதாகம அடித்தளம் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், எதிர்காலத்தில் உலகத்தையே அசைக்கும்விதமான மூன்று காரியங்கள் நிகழும் என்று வேதாகமம் கூறிக்றது. முதலாவது, எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் கோடிக்கணக்கான மக்கள் காணாமல் போவார்கள்; இரண்டாவது, உலகத்தை ஆளும் அதிகாரம் ஐக்கிய நாடுகளிடமிருந்து பறிக்கப்படும். மூன்றாவது, உலகத்தின் தலைவன் எழும்பி தன்னால் இந்த உலகத்திற்கு சாமாதானத்தை கொடுத்து நிலைபடுத்த முடியும் என்பான். இப்படி நடக்க காரணம் என்ன? வேதம் சொல்கிறது, “கர்த்தர் எக்காள சத்தத்தோடு வானங்கள் மீது வருவார்... கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பிறகு உயிரோடு இருக்கும் நாமும் கண்ணிமை பொழுதில் மேகங்கள் வழியாய் சென்றிடுவோம்; மேகங்கள் நடுவே தேவனை சந்திப்போம்; அவரோடு கூட நித்திய நித்தியமாய் வாழ்ந்திடுவோம்.” இந்த வல்லமையான நிகழ்வு சம்பவிக்கும்போது, அவிசுவாசிகள் மட்டுமே பூமியில் கைவிடப்பட்டு காணப்படுவார்கள்.

இன்றைக்கு நம்முடைய தேசத்தில் இருக்கும் தீர்க்கதரிசனங்களை பற்றி நன்கு அறிந்த 3 மேதைகளை அழைத்திருக்கிறேன் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு சம்பவிக்க இருக்கும் எடுத்துகொள்ளுதலை பற்றி வேதாக ரீதியில் விளக்கிடுவார்கள். அவர்கள் Dr. எட் ஹின்சன், ராளிங்க்ஸ் டிவினிட்டி பள்ளியின் முதல்வர் மற்றும் லிபர்டி பல்கலைகழகத்தின் முன்னிலை பேராசிரியராக இருக்கிறார். இவர் ராஜா வருகிறார் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரசங்கியாளராக இருக்கிறார், நாற்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை தீர்க்கதரிசனங்கள் என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார் மேலும் ஐந்த ஸ்டடி பைபில்களின் எடிடராகவும் இருக்கிறார். இரண்டாவது, Dr. மார்க் ஹிட்ச்காக், வேதாகம வெளிப்பாடு பிரிவின் துணை பேராசிரியராக டல்லாஸ் தியாலஜிகல் செமினரியில் பணிபுரிகிறார்.

வேதாகம தீர்க்கதரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், பெயித் பைபிள் திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார். மூன்றாவது, Dr. ரான் ரோடாஸ், வசனங்களில் ஆராய்ந்து காரணங்களை அறிதல் ஊழியங்களின் தலைவராக இருக்கிறார். ஐவரும் டல்லாஸ் தியாலகிகள் செமினரியில் பணிபுரிந்துவருகிறார் தீர்க்கதரிசனங்களை குறித்து 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இன்றைய ஜான் அன்கெர்பெர்க் விசேஷ தொகுப்பினை காண உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நா தான் ஜான் அன்கெர்பெர்க், உங்களை பார்ப்பதில் மகிழ்ச்சி. சரி, இதை பார்த்துகொண்டிருக்கும் நேயர்களிடம் இருந்து நிறைய கடிதங்களை பெற்றுக்கொண்டு இருக்கிறோம். அதாவது, ஒவ்வொரு மாதமும் 8.5மில்லியன் கடிதங்களை பெற்றுக்கொண்டு இருக்கிறோம், பெரும்பாலனவர்கள் இப்போது நாம் பார்க்கப்போகிற தலைப்பை குறித்ததான கேள்விகளை தான் எங்களுக்கு அனுப்பி கொண்டு இருக்கிறீர்கள். அதனால் தான் இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறோம். இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது என்ன நடக்கும் என்று வேதம் சொல்கிறதை என்பதை விளக்கி சொல்ல மூன்று பேரை அழைத்திருக்கிறோம், அவர்கள் உலகத்தில் என்ன நடக்க போகிறதென்று சொல்லுவார்கள்.

என்னுடைய விருந்தினர்களான Dr. எட் ஹின்சன், Dr. மார்க் ஹிட்ச்காக், Dr. ரான் ரோடாஸ், நம்முடன் இருக்கிறார்கள். இவர்கள் மூன்று கிட்டத்தட்ட 140 புத்தகங்களுக்கு மேலாக வேதாகம தீர்க்கதரிசனங்ளை குறித்து எழுதியிருகிறார்கள்.

சரி, ஜென்டில் மேன், கடந்த வாரம் அப்போஸ்தலனாகிய பவுல் எதிர்காலத்தில் ஒரு கட்டத்தில் எல்லா கிறிஸ்தவர்களும் எடுத்துகொள்ளப்படுவார்கள் என்பதை தெளிவாக போதிக்கிறார், இருக்க மாட்டாங்க, எடுத்துகொள்ளப்படுவார்கள், பூமியிலிருந்து, கிறிஸ்துவை சந்திக்க போவார்கள், சரியா. வேதம் இதைதான் சொல்லுகிறது. சரி, எடுத்துகொள்ளப்படுதல். பலதரப்பட்ட இடங்களில் சங்கள் இருப்பதாக பார்த்தோம்.

இதை உபத்திரவ காலத்திற்கு முன்பு சம்பவிக்கும் என்று வேதம் கூறுகிறது. இதோடு சில காரியங்களை சொல்ல விரும்புகிறோம். இந்த வசனங்களை சில போதகர்களுக்கு சொல்ல விரும்புகிறோம் தென் ஆப்ரிகா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இருப்பவர்கள், இந்த வசனம் என்ன சொல்கிறது, ஏன்னா வசனத்தின் அடிப்படையான தீர்வை தான் நாம் பார்க்க வேண்டும்.

கடந்த வாரம் 1 தெசலோனிக்கேயர் 4:16ஐ பற்றி பார்த்தோம், அதாவது, "தேவன் தாமே தம்முடைய பரிவாரத்தோடு வானங்களில் இருந்து இரங்கி வருவார், பிரதான தூணின் சத்தொடும், தேவ எக்காளத்தோடும் வருவார்; கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்திருப்பார்கள்; பிறகு உயிரோடு இருக்கும் நாமும் அவர்களோடு கீஓட எடுத்துகொள்ளப்படுவோம்" ஒன்றாக எடுத்துகொள்ளபப்டுவோம், அதாவது ஹர்பாசோ, இதை தான் லத்தீன் மொழியில் ரபேரே  என்கின்றனர். அதுவே ஆங்கிலத்தில் ராப்ச்சர் என்று சொல்லபப்ட்டது. மேகங்கள் மீது, மத்திய ஆகாயத்தில் தேவனோடு சேர்ந்துகொள்வோம்.அவரோடு என்றென்றைக்குமாய் வாழ்ந்திடுவோம்." பவுல் கூறுகிறார், அதனால், :இந்த வார்த்தைகளை சொல்லி ஒருவரை ஒருவர் தேற்றிடுங்கள்."

இன்றைக்கு எடுத்துகொள்ளப்படுதலை குறித்த  இரண்டாவது முக்கியமான வேத பகுதியை பார்க்க இருக்கிறோம். 1 கொரிந்தியர் 15:51-52. வீட்டில் இருக்கிற நேயர்களும் பார்க்கும்படியாக இதை திரையில் காண்பிக்க நான் விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்கு இதை எழுதுகிறார், கொன்றிந்து சபைக்கு எழுதுகிறார், அவர்களிடம் அவர், "இதோ, ஒரு இரகசியத்தை வெளிப்படுத்துகிறேன் என்கிறார்." அந்த ரகசியம் என்னது என்பதை பற்றிதான் நாம் பார்க்க இருக்கிறோம். " நாம் எல்லாரும் நித்ஹ்டிரை அடைவது இல்லை." இதற்கு என்ன அர்த்தம்? ஆனால் நாம் மருரூபமாவோம். ஒரு நொடி பொழுதில், கடைசி எக்காளத்தின் போது கண்ணிமைக்கும் நேரத்தில் மாறிடுவோம்: எக்காள சத்தம் தொனிக்கும்போது, மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் நாமும் மருரூபமாக்கப்படுவோம்." இந்த பகுதியில் பவுல் நான்கு காரியங்களை போதிக்கிறார். முதலாவதாக என்ன

சொல்லுகிறார், "அன்பான மக்களே, உங்களுக்கு அறிவிக்கும்படியாக ஒரு ரகசியத்தை வைத்திருக்கிறேன்." அந்த ரகசியம் என்ன?

**Dr. எட் ஹின்ட்சன்**: இரகசியம் என்பது முன்பு ஒருவரும் அறிந்திராத ஒரு விஷயம், இதுவரைக்கும் அதை பற்றி யாருக்குமே தெரியாது என்பது போன்ற ஒன்று. இயேசு வருகிறார் என்பதை புரிந்துகொண்டார்கள், ஆனால் அதனுடைய எல்லா விபரங்களையும் அவர்கள் புரிந்துகொள்ள வில்லை. இரண்டு விஷயங்களை நாம கவனிக்கணும், ஜான், எல்லாரும் நித்திரை அடையப்போவது கிடையாது- எல்லாருமே மரிக்க போவது இல்லை – ஆனால் நாம் மாற்றமடந்திடுவோம். சரி, இதுதான் ரகசியம். இந்த உலகத்தில் இந்த விஷயம் எப்படி நடக்க போகிறது? எடுத்துகொள்ளுதலை குறித்த உபதேஸ்வம் அதன் விளக்கம் , உயிர்த்தெழுதல் என்ற ஒன்றோடு தொடர்புகொண்டு இருக்கிறது, விளக்கம் இங்கதான் இருக்குது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி, மார்க், சிலருடைய கருத்து என்னன்னா,"சரி, உண்மையாகவே, இது ஒரு ரகசியம் தானா? அதாவது, இதை பற்றி வேதாகமத்தில் வேறு யாருக்காவது தெரியுமா? உண்மையில் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு இதை பற்றி தெரியாது. உயிர்த்தெழுதலை பற்றி அவர்களுக்கு தெரியும். சில உதாரணங்களை சொல்லுங்கள்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: சரி, தானியேல் 12:2, தானியேல் தீர்க்கதரிசி கூறுகிறார், அதாவது, பூமியின் தூளியே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும் சிலர் நித்திய நிந்திக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். மரித்தவர்களின் சரீரங்கள் எதிர்காலத்தில் உயிரோடு எழுந்திருக்கும் என்று தானியேல் தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் உள்ள ரகசியம் இப்போது வெளிபடுகிறது அதாவது ஒரு தலைமுறையினர் தங்கள் வாழ்வில் மரணத்தை அடையாமல் அப்படியே கல்லறைக்கு விலகி மரணமில்லாமல் இருப்பார்கள் . ஒரு

இமைபொழுதில் அவர்கள் அழிவுள்ள இந்த நிலையில் இருந்து அழிவில்லாமையை தரித்துகொள்வார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா, இந்த ரகசியமானது இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்ற இரகசியம் அல்ல.

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஏன்னா தூதர்கள், இயேசு பரலோகத்திற்கு ஏறி போகும்போது, அவங்ககிட்ட சொன்னாங்க, “கலிலேயராகிய மனுஷரே, ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து கொண்டு இருக்கிறீர்கள்? உங்களுக்கு முன்பாக இயேசு எப்படி வானத்திற்கு ஏறி சென்றாரோ அபப்டியே மீண்டும் அவர் மேகங்களின் மீது வருவதை காண்பீர்கள் என்றனர்.” இயேசு மறுபடியும் வரப்போறாருன்னு அவங்களுக்கு ஏற்கனவே தெரியும். அது ஒரு ரகசியமாக இருக்கலா. சரி, இதை பற்றி இன்னும் கொஞ்சம் சொலுங்கள், ரான், இந்த ரகசியம் உண்மையில் எதை வெளிப்படுத்தி சொல்லுகிறது.

**Dr.ரான் ரோடஸ்**: சரி, பவுல் சொல்றாரு, “நாம் எல்லாரும் மரிப்பது இல்லை,”

அதனுடைய அர்த்தத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நித்திரை என்று சொல்லும்போது, இது ஆத்துமாவை குறிப்பது கிடையாது, ஏன்னா ஆத்துமா ஒருபோதும் தூங்குவது கிடையாது. ஒரு நபர் மரிக்கும்போது, அவனுடைய ஆத்துமாவும் ஆயும் உயிரோடு தான் இருக்கும். நீங்க கிறிஸ்தவராக இருந்தால், ஒரு உரையிலிருந்து கை வெளிவருவது போல உங்கள் ஆவி உங்கள் சரீரத்தை விட்டு வெளியேறி பரலோகத்தில் இருக்கும் தேவனிடம் சென்றிடும். ஆனா இதற்கிடையில் உங்களுடைய சரீரம் நித்திரை செய்யும் நிலையை அடைந்தது போல இருக்கும். படுத்திருக்கும் நிலை, கண்கள் மூடியிருக்கும், அதைதான் அடக்கம் செய்வார்கள். சரி, இந்த வேத பகுதி என்ன சொல்லுகிறது என்றால் ஒரு கூட்டத்தார் இந்த நித்திரை செய்யும் அனுபவத்திற்கு விலக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். அதாவது இந்த பூமியில் மரித்த நிலையில் கண்களை மூடி படுத்திருக்கும் நிலையை நாம் ஒருபோதும் அடைவதில்லை என்கிறது,

மரித்தது, போல இருக்காது. இதுதான் தலைமுறை தலைமுறையாக கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. எனவே, இன்றைக்கு, பெரும்பாலான ஜனங்களுடைய எதிர்பார்ப்பு, நாமதா அந்த சந்ததியினரா? அது சத்தியமாக இருக்கலாம் என்பதற்கான சில நல்ல காரணங்களை வருகிற வாரங்களில் நாம் பார்க்க இருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி, எட், இதை நாம சொல்லி முடிக்கனுன்னு நினைக்கிறேன். ஒரு கருத்தரங்கில் நீங்க பேசினதை கேட்டிருக்கிறேன், நானும் அதை பற்றி கருத்தரங்குகளில் பேசியிருக்கிறேன். ஜனங்களுக்கு சாஸ் கொடுப்பேன். இப்படிதான் நீங்க பரலோகம் போக முடியும்: ஒரு கிறிஸ்தவனாக ஒரு விசுவாசியாக இயேசுவை அறிந்திருந்தும் உங்களுக்கு புற்றுநோய் வந்தாலும், ஹார்ட் அட்டாக், அல்சீமர் வரலாம், சரியா? நீங்க அழறீங்க, வேதனைபடறீங்க குறிப்பிட்ட காலம் நிந்தனை,இருக்கும் வருடங்கள் கூட ஆகலாம், அப்பறம் நீங்க மரித்து பரலோக போறீங்க. இது ஆப்ஷன் நம்பர் 1. அல்லது ஆப்ஷன் இரண்டு அதுதான் எடுத்துகொள்ளப்படுதல் என்பதாகும், உலகமெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் எல்லாரும், எதிர்காலத்தில் ஏதாவது ஒருநாள், பூம், உயிரோடு, எங்கையோ காணாமல் போயிடுவாங்க, சரியா? நான் சொன்னே, “உங்களுக்கு எந்த ஆப்ஷன் பிடித்திருக்கிறது?

**Dr. எட் ஹின்ட்சன்**: சரி, பெரும்பாலும் ஜனங்கள் எடுத்துகொள்ளப்படுவதை தான் விரும்புகிறார்கள். கேள்வி என்னன்னா, எடுத்துகொள்ளப்படுதலில் நீ இருக்க முடியுமா? ஏதோ ஒரு விதத்தில், தேவன் வரணும் இல்ல மரணம் வரணும், இல்ல எடுத்துகொள்ளப்படுதலில் போகணும். ஹர்பாசோ என்பதன் அர்த்தம் என்னவென்றால், சாப், இங்கிருந்து தேவ மகிமைக்குள் பிரவேசிப்பது. இந்த பகுதியில் நாம் எல்லாரும் உருமாற்றமடைவோம் என்று பவுல் கூறுகிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: அதற்கு அர்த்தம் என்ன?

**Dr. எட் ஹின்ட்சன்**: மரித்தவர்களும் உயிரோசு இருப்பவர்களும் இரண்டுபேருமே. இங்கிருக்கும் கிரேக்க வார்த்தை என்னவென்றால் ஆலோச்சோ. அதற்கு அர்த்தம்

மருரூபமாகுதல். இது முற்றிலுமான மறுரூபம் அதாவது மரித்த சடலம், காலா காலமாக மண்ணில் புதைபட்டு ஒன்றுமில்லாமல் இருந்தாலும், அது மருரூபமாகி உயிரோடு எழுந்திருக்கும். உயிரோடு இருக்கிற நாமும் மருரூபமாகிடுவோம், மாற்றமடைந்து, மத்திய ஆகாயத்தில் தேவனை சந்திக்க போவோம்.

சிலருடைய கருத்து என்னவென்றால், ‘‘அப்படின்னா அப்படியே கூரையை பிச்சுட்டு போயிடுவோமா?’’ சரி, உங்களால தூசியிலிருந்து சவ பெட்டிலி இருந்து எழும்ப முடியும்போது, எடுத்துக்கொள்ளப்படுதலில் கூரையை பிச்சுட்டும்ம் எழும்ப முடியும். இயேசுவின் மகிமையடைந்த சரீரமும் இப்படிதான் இருந்தது. அவரால ஒரு அறைக்குள் வர முடிந்தது, தத்ரூபமான சரீரத்தோடு வந்தார். “என்னை தொட்டு உணர்ந்து பாருங்கள் என்றார்.” அவரால அப்படி சொல்ல முடிந்தது. அது மகிமையடந்த நிலையாக இருந்ததினால் அவரால தோன்றவும் மறையவும் முடிந்தது. நாமும் கூட இதே மாதிரியான மகிமையான நிலையில்தான் இருப்போம். அந்த சரீரம் உண்மையான சரீரம் நாம எல்லாரும், மரித்தவர்களும் உயிரோடு இருப்பவர்களும், எல்லாரும் உருமாறிடுவோம்.

**Dr.ரான் ரோடஸ்**: அதாவது, ஒரு விஷயத்தை ஜனங்களுக்கு சொல்ல விரும்புகிறேன் எடுத்துகொள்ளப்படும்போதும் இன்னொரு நிலையிலான சரீரத்தை பெறுவார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஓ, ஆமா.

**Dr.ரான் ரோடஸ்**: அந்த சரீரம் உண்மையில் பூரணமான சரீரமாக இருக்கும். அங்க இருதய நோய்கள் இருக்காது, அதில் சிறுநீரக பிராத்தனை இருக்காது, அதுல கொலஸ்ட்ரால் அதிகமாகாது, சுருங்கிப்போன சருமம் இருக்காது, நரைத்த முடி இருக்காது, உங்க தலையில் இருந்து முடி கொட்டாது. நம்முடைய சரீரம் தேவனுடைய பிரசன்னத்தில் வாழும்படியாக வடிவமைக்கப்பட்டு இருக்கும். அந்த சரீரத்தின் சிறப்பு அம்சம் இதுதான் என்று நான் நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா, அதோட, மார்க், இது எவ்வளவு துரிதமாக சம்பவிக்கும் என்றும் பவுல் நமக்கு விளக்கி சொல்றாரு. அதாவது, ஒரு நொடி பொழுதில், கண்ணிமைக்கும் நேரத்தி." இதற்கு என்ன அர்த்தம்?

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: சரி, இதுல அருமையான விஷயம் என்னன்னா பவுல் நாம எடுத்துகொள்ளப்படுதலை புரிந்துகொள்ளுகிற விதமாக நமக்கு அதை சில விதங்களில் எடுத்து சொல்லியிருக்கிறார். அதை நீங்க வாசிக்கும்போது, அதுக்கு ரொம்ப நாள் ஆகும் என்பது போல தோன்றிடலாம். அதாவது, இயேசு மறுபடியும் வர போகிறார். ஆரவாரம் இருக்க போகிறது, பிரதான தூதனின் சத்தம் தொனிக்க போகிறது; தேவ எக்காலம் முழங்கும். கிறிஸ்துவுக்குள்  மரித்தவர்கள் முதலில் எழுந்திருப்பார்கள்; உயிரோடு இருக்கும் நாமும் எடுத்துகொள்ளப்படுவோம். இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடக்கும் என்பது போல தோன்றுகிறது. ஆனால் தேவன் இதை நிதானமாக எடுத்து சொல்கிறார், ஒருவேளை, நமக்கு, ஒவ்வொன்றாக விளக்கி சொல்லலாம். இதெல்லாம் ஒரு நொடி பொழுதில் நடக்க போகிறது. வேதம் அதைதான் சொல்கிறது. இங்க இருக்கிற வார்த்தை, நொடிபொழுது, அட்மாஸ் என்ற வார்த்தை. இந்த வார்த்தையில் இருந்துதான் ஆட்டம் என்று வருகிறது. இதற்கு மேல இதை பிரிக்கவே முடியாது. இது ஒரு நொடி பொழுதில் நடக்கும், கண்ணிமைக்கும் நேரத்தில். கண்ணிமைக்கும் நேரம் என்று சொன்னால் உங்கள் கண் இமைக்கிற அந்த வினாடியின் அளவு, அதாவது ஒரு வினாடியின் ஆயிரமடங்கில் ஒரு மடங்கு. சிலர் இதை வெளிச்சத்தின் பிரதிபலிக்கும் நேரத்திற்கு ஒப்பான நேரமாக கருதுகிறார்கள் அல்லது கருவிழியில் உதிக்கும் ஒளி போல என்கிறார்கள். எதுவானாலும் சரி துரிதமா இருக்கும். சரீரத்தில கண்ணிமைக்கும் நேரம் மட்டும்தான் ரொம்ப துரிதமா நடக்கிற ஒன்றாக இருக்கும். அபப்டினா என்ன அர்த்தம் இந்த காரியங்கள் எல்லாம் ஒரு நொடி பொழுதுல கண்ணிமைக்கும் நேரத்துல துரிதமாக நடந்து முடிந்துவிடும். அப்ப, ஒரு நொடி பொழுது, இந்த பூமியில் இருக்கும் எல்லா விசுவாசிகளும் நொடி பொழுதில் எடுத்துக்கொள்ளப்படுதலில் இந்த பூமியை விட்டு காணாமல் போய்விடுவார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி, இப்ப, அதாவது, பெரும்பாலும் ஜனங்கள் எடுத்துகொள்ளபப்டுதலை பற்றி பேசும்போது கட்டுகதையை சொல்வதாக நினைத்துகொல்கிரார்கள். வேதத்தின் வசனம் என்ன சொல்கிறது என்பதை தான் உங்களுக்கு எடுத்து சொல்ல விரும்புகிறோம் நேயர்களே, சரியா? இந்த வேதத்தை கொடுத்தது தேவன் தான் இது அவருடைய வார்த்தைகள் என்று நம்பினால், இந்த நிலையை நாம் கவனிக்க வேண்டியது முக்கியம். இதோடு இன்னும் சிலவற்றை பார்க்கலாம். இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். இப்போது மிக முக்கியமான இரண்டு வேத பகுதிகள் இருக்கிறது, இன்னும் இயேசு தமது வாயினால் கூறிய வார்த்தைகளை பற்றி பார்க்க இருக்கிறோம். அது ரொம்ப ஆச்சரியாமான ஒன்றாகும், யோவான் பதினான்கு. இப்போது இடைவேளை எடுத்துகொள்வோம். தொடர்ந்து இணைந்திருங்கள், மீண்டும் சந்திக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் மிகவும் சுவாரஸ்யமான தலைப்பை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம், கிறிஸ்தவ திருச்சபைகளில் நம்பிக்கை, அதுதான் இயேசு கிறிஸ்துவின் வருகை. நாம் பார்த்துகொண்டிருக்கும் காரியங்களை வைத்து இயேசு கிறிஸ்து மீண்டும் வருவது இரண்டு நிலைகளை கொண்டிருகிறது என்று சொலுகிறோம், ஆல்ரைட்? ஒரு சமயம் இருக்கிறது அப்போது அவர் வந்து கிறிஸ்தவர்களை இந்த ஆலகத்திளிருந்து இழுத்து சென்றிடுவார். மீண்டும் அந்த கிறிஸ்தவர்களோடு உபத்திரவத்தின் முடிவில் மீண்டும் வருவார் நியாயாதிபதியாய் அந்து, ஆளுகை செய்திடுவார். இதற்கு இடையில் உபத்திர காலம் இருக்கிறது.

வேதத்தின் இந்த காரியங்களை ஆதரிக்க நாங்கள் விரும்புகிறோம். இன்னொரு பகுதியை உங்களுக்கு காட்ட விரும்புகிறோம், இது சுவாரஸ்யமாக இருக்கும். இது கர்த்தராகிய இயேசு தாமே சொல்லியிருக்கிறார், விவாதிக்க வழியில்லை. இது அவருடைய வார்த்தைகள். திரையில் காண்பிக்க விரும்புகிறேன். இதை நீங்கலாகு பாருங்கள். யோவான் 14:1-3 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில்

விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.'' மார்க், இயேசு இங்க நான்கு காரியங்களை சொல்லுகிறார், குறைந்தபட்சம், என்று சொல்லலாம்" முதலாவதாக, அவர், "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலம் வீடுகள் இருக்கிறது என்கிறார், தங்குமிடங்கள். இப்ப பிதாவின் வீடு எங்க இருக்கு? பாஸ்டன்லையா?

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: சரி, பிதாவின் வீடு பரலோகத்தில் இருக்கிறது. இது ஒரு விளக்கமா இருக்குன்னு தான் நினைக்கிறேன். வேதத்தில் பரலோகத்தை குறிக்கும் மற்றொரு சொல்லாக பயன்படுகிறது. வேதம் சொல்கிறது நாம் மூன்றாவது வானத்திற்கு போவோம், அல்லது பரலோகம். அதை பரதீசி என்றும் சொல்வார்கள். இது பரலோக நகரம் என்று தான் நான் நினைக்கிறேன், வெளிப்படுத்தல் 21-22 அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கும் புதிய எருசலேமாக இருக்கலாம். பிதாவின் வீட்டை குறித்து இங்க இயேசு அழகாக விவரித்து சொல்லுகிறார் என்று தான் சொல்வேன். எல்லாருக்கும் அறைகள் இருக்க கூடிய பெரிய விஸ்தாரமான ஒரு இடத்தை பற்றிதான் இங்கு சொல்லப்பட்டு இருக்கிறது, வீடு என்று இருக்கிறது. பிதாவின் வீட்டை குறித்த சிறந்த விளக்கம் இதுதான், அது நமக்காக வாங்கப்பட்டிருக்கும் – இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நமக்காக வாங்கப்பட்ட ஸ்தலம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆனா இப்படிதான் ஆரம்பிக்கிறார், இது குறிப்பிட்ட ஒரு இடம்

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: நிச்சயமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: குறிப்பிட்ட ஒரு பகுதி, இந்த பகுதியின் மற்ற வார்த்தைகள் இதை சார்ந்ததாகத்தான் இருக்கிறது.

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: சரி. உண்மையான இடம்

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: அவர் எந்த இ டத்தை பற்றி பேசுகிறார் என்பது புரியாவிட்டால், அவர் என்ன சொல்கிறார் என்பதை நாம் தவற விட்டிடுவோம்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: சரியா சொன்னீங்க.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: என்னுடைய தகப்பன் வீட்டில், அது பரலோகத்தில் தான் இருக்கிறது.

**Dr. மார்க் ஹிட்ச்காக்**: நிச்சயமா. அதுதான் சரி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆல்ரைட்? எட், அவர் இன்னொண்டும் சொல்கிறார், "உங்களுக்காக நான் போய் இடத்தை ஆயத்தப்படுத்துகிறேன்."

**Dr. எட் ஹின்ட்சன்**: அதாவது, எதற்காக இயேசு மறுபடியும் பரலோகத்திற்கு பொகவளந்டியிருந்ததுனு யோசிக்கிறேன். அவர் விசுவாசிகளுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பன்னும்படியாகதான் பரலோகத்துக்கு போனார். சிலர் அவர் அங்க இந்த வேலைய தான் செய்துட்டு இருக்காருன்னு சொல்றாங்கள், இருக்கலாம், கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருஷமா இருகாரு. இந்த உலகத்தை தன வார்த்தையால் உண்டாக்கினவர் ஒவ்வொரு விசுவாசிக்கும் நித்தியத்திற்குரிய வீட்டை ஆயத்தப் படுத்தி கொண்டு இருக்கிறாரா? இதுல சுவாரஸ்யமானது என்னன்னா, யோவான் பதினாலில் உள்ள செய்தியை நீங்க வாசித்து பார்க்கும்போது, இயேசு அங்கிருந்த தம்முடைய 11 விசுவாசமுள்ள விசுவாசிகளோடு பேசிக்கொண்டு இருக்கிறார். யூதாஸ் அப்பவே அங்கிருந்து போயிட்டான். இது அவிசுவாசிகளுக்குரிய வாக்குத்தத்தம் அல்ல; இது விசுவாசிகளுக்கு மட்டும் வாக்குபன்னப்பட்டு இருக்கிறது, "நான் என் பிதாவின் வீட்டிற்கு போய், உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுகிறேன். நான் ஆயத்தம்

பண்ணினதும், நான் வந்து உங்களை என்னோடு கூட அந்த இடத்திற்கு அழைத்து செல்வேன்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி. ரான்.

**Dr.ரான் ரோடஸ்**: ஒரு விஷயத்தை நான் சொல்ல நினைக்கிறேன், ஜான், இதே இயேசுதான் இந்த நித்தியா நகரத்தை ஆயத்தம் பண்ணுகிறார், எட் சொன்னதுபோல, அண்டசராசரத்தை உண்டாக்கிய அதே இயேசு. யோவான் 1:3; கொலோசெயர் 1:16; இந்த முழு பிரபஞ்சத்தையும் உண்டாக்கியதில் இயேசுவுக்கும் மிகப்பெரிய பங்கு இருக்கிறது. சரி, இதை கவனிங்க. வெற்றிடமான நிலத்தில் இராத்திரி போய் நின்று பாருங்க, நகரத்துல இல்லை, நாட்டுக்க்கு வெளியில் இருக்கிற ஏதாவது ஒரு இடம், அண்ணார்ந்து பாருங்கள், அங்க ஆயிரக்கணக்கான மகிமையான நட்சத்திரங்கள் தெரியும். சரி, இன்னும் நீங்க முலுசா எதையுமே பாக்கலன்னுதான் சொல்வேன். இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கிய அதே இயேசு புதிய எருசலேமை வடிவமைத்து சிருஷ்டிக்கிறவராக இருக்கிறார். அது உண்மையான ஸ்தலமாக இருக்கும். நீங்க உயிர்த்தெழுந்த சரீரத்தோடு இருப்பீங்க, அந்த தத்ரூபமான உயிர்த்தெழுந்த சரீரம் அந்த உண்மையான நகரத்தில் குடியிருக்கும். நிச்சயமா அங்க புதிய பூமியின் புதிய வானங்களும் உண்டாயிருக்கும். இன்னொரு விஷயத்தையும் ஜனங்களுக்கு சொல்ல விரும்புகிறேன் நமக்கு உயிர்த்தெழுந்த சரீரம் இருக்கும், அதேமாதிரி உயிர்த்தெழுந்த பூமியும் இருக்கும், உயிர்ப்பிக்கப்பட்ட பிரபஞ்சம் உண்டாகும். இது எல்லாமே புதியதாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: அந்த பட்டணம், பரலோகம். பார்க்க கூடியது, நிச்சயமாக பார்க்க முடியும்.

**Dr.ரான் ரோடஸ்**: உண்மையில், யோவான் தெளிவா சொல்றாரு, அந்த நகரத்தின் மகிமையை விளக்கி சொல்ல தன்னால முயன்ற அளவு முயற்சித்து இருக்கிறார். பவுல் கூட சொல்லியிருக்காரு ஒருவருடைய இருதயத்திலும் தொன்றினதுமில்லை, கண்கள்

காணவுமில்லை, காதுகள் கேட்கவுமில்லை, கிறிஸ்தவர்களுக்கு அது எவ்வளவு மேன்மையாக இருக்க போகிறது தெரியுமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா, அது ஆயிரத்து நானூறு மைல் நீளம், ஆயிரத்து நானூறு மைல் அகலம், ஆயிரத்து நானூறு மைல் உயரம் கொண்டது.

**Dr.ரான் ரோடஸ்**: ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரியா?

**Dr.ரான் ரோடஸ்**: அதுமட்டுமில்ல அங்க நிறைய தங்கங்களும் விலையுயர்ந்த பொருட்களும் இருக்கும், நகரம் முழுவதும் ஆபரணங்களால் நிறைந்து இருக்கும். மெல்லிய சுவர்களுக்கு பின்னால் மின்னிகொண்டிருக்கும் ஆட்டுக்குட்டியானவரின் மகிமையை நினைத்து பாருங்கள், எல்லா இடங்களிலும் ஆபரணங்களின் மினுக்கு, கற்பனை செய்ய முடியாது. யோவான் தன்னால் இயன்ற அளவிற்கு விவரிக்க முயன்றிடுகிறார், ஆனா இதை விட சிறப்பாக இருக்கும்.

**Dr. எட் ஹின்ட்சன்**: அது, மட்டுமில்ல, ரான், அதாவது, இங்க, என்னோடு உங்களை, என் பிதாவின் வீட்டிற்கு கூட்டீட்டு போவேன் என்று அவர் சொல்கிறார். அருமையான விஷயம் என்ன தெரியுமா இயேசு அங்க இருக்கிறார் நாம முகமுகமாய் அவரை பார்ப்போம் ராஜாவை பார்க்கிரவர்களோடு இருப்போம்.

**Dr.ரான் ரோடஸ்**: ஆமென்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: மார்க், இந்த விஷயத்தை மறுபடியும் பார்க்க விரும்புகிறேன். அதாவது, என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் இருக்கிறது என்கிறார்." அவர் குறிப்பிட்ட இடத்தை பற்றி சொல்லுகிறார், பரலோகம். அதுகூட அவர் சொல்லும்போது, "அப்படி இல்லாமல் இருந்தால், உங்களுக்கு சொல்லியிருக்க மாட்டேன் என்கிறார்." அபப்டின்னா அவர் எதை பெற்றி பேசுகிறார் என்று தெரிந்துதான் பேசினார்.

இல்லையா? அதுமட்டுமல்ல அவர், நான் மறுபடியும் வந்து, உங்களை நான் இருக்கும் இடத்திற்கு என்னோடு கொண்டு செல்வேன் என்று சொல்லுகிறார்." நம்மை எங்கு கூட்டிக்கொண்டு செல்ல போகிறார் என்று இயேசு நிச்சயமாக அறிந்திருந்தார் என்று எனக்கு முழுமையாக தெரியல. 1 தேசலோனிகேயர் நான்கின்படி கிறிஸ்தவர்கள் பூமியில் இருந்து எடுத்துகொள்ளபப்டுவ்பார்கள் என்று நமக்கு தெரியும், நாம் மத்திய ஆகாயத்தில் தேவனை சிந்திப்போம். கேள்வி என்னவென்றால், அதற்கு பிறகு என்ன நடக்கும்? யூ டர்ன் போட்டு மறுபடியும் பூமிக்கு வருவோமா, உபத்ஹ்டிரவதிற்கு பிறகு என்று அதைதான் சொல்கிறதா? அல்லது, இந்த பகுதி வேறு எதையாகிலும் சொல்ல முயல்கிறதா? நாம் தேவனோடு சென்று பிதாவின் வாசஸ்தலத்தில் இருக்க போகிறோம்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆமா, 1 தெசலோனிக்கேயர் நான்கில் எழும்புகிற பொதுவான கேள்விதான் இது. மத்திய ஆகாயத்தில் நாம் தேவனை சந்திக்கும்படி எடுத்துகொள்ளபப்டுவோம், நாம் தேவனோடு இருப்போம், ஆனா நாம எங்க போவோம்? எங் அபோவோம் என்ற கேள்விக்கு இந்த பகுதி விடை அளிக்கிறது. ஏன்னென்றால், மறுபடியும், எடுத்துகொள்ளப்படுதலில் நடக்கும் பலதரப்பட்ட காரியங்கலின் நேரத்தை பற்றி பார்த்தோம். பொதுவாக காணப்படும் கண்ணோட்டம் என்னவென்றால் உபத்திரவ காலத்திற்கு பின்பாக நடக்கும் எடுத்துகொள்ளப்படுதலின் நிகழ்வு அதாவது இயேசு இரண்டாவது வருகையில் வருகிறார், உபத்திர காலத்தின் இறுதியில் தான், விசுவாசிகள் அனைவரும் அவரைகானும்படி செல்வார்கள் போயிட்டு மறுபடியும் திரும்பி பூமிக்கு வந்திடுவார்கள் என்கின்றனர். ஆனா யோவான் பதினான்கில் அவர் நமக்கு தெளிவாக கூறியிருக்கிறார் அவர் வந்து நம்மை பிதாவின் வீட்டிற்கு தம்மோடு இருக்கும்படி அழைத்து சென்றிடுவார். அதனால இந்த பகுதி உபத்திர காலத்திற்கு முன்புதான் எடுத்துகொள்ளப்படுதல் இருக்கும் என்கிறது. நாம் எடுத்துகொள்ளப்படுவோம்; நாம் பிதாவின் வீட்டில் இருப்போம். பரலோகத்தில் இன்னும் சில காரியங்கள் நடக்கப்போகிறது –கிறிஸ்துவின்நியாயாசனம், ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் – அதற்கு பிறகு அவரோடு கூட நாம் பூமிக்கு திரும்ப வருவோம். ஆனால் இதுல எனக்கு

ஆறுதலான விஷயம் என்னன்னா, அதாவது,யோசித்து பார்க்கிறேன்: நித்திய காலம் முழுவதும் இயேசு எங்க இருப்பாரோ, அங்கதான் நாமும் இருக்க போகிறோம். நாம அவரோடு கூடத்தான் இருக்க போகிறோம்.

**Dr.ரான் ரோடஸ்**: இதுல இன்னொரு விஷயத்தை சேர்த்துக்கலான்னு நினைக்கிறேன் இது யோவான் பதினாளுக்கும் 1 தெசலோனிக்கேயர் நான்கிற்கும் பொருத்தமாக இருக்கும். ஏன்னா யோவான் பதினாலு கூறிகிறது, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக." அதோட 1 தேசலோனிகேயர் நான்கு பதினெட்டு கூறுகிறது, "இந்த வார்த்தைகளை சொல்லி ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்திடுங்கள்." அதாவது, இங்க மறுபடியும் வேதாகம தீர்க்கதரிசனத்தின் செயல்பாட்டு முறையை பார்க்க முடிகிறது. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை அறிவுப் பூர்வமாக அறிந்துகொள்வது மட்டுமல்ல, ஏதாகிலும் ஒரு விதத்தில் நம்மை மாற்றுகிறது. அது நம்மை உருமாற்றும் விதங்களில் சில என்ன்னவென்றால் ஆறுதல் படுத்துகிறது; குறிப்பாக வாழ்க்கை நம்மை சிதறடிக்க வைக்கும்போது. மரணத்தை எதிர்கொள்ளும்போது அல்லது பிரியமானவர்கள் மரிக்கும்போது இந்த சத்தியம் நமக்கு ஆறுதலை தேற்றுதலை கொடுக்கிறது.

**Dr. எட் ஹின்ட்சன்**: ஜான், இது நமக்கு அருமையான நம்பிக்கையின் நிச்சயத்தை கொடுக்கிறது, கிறிஸ்து மாத்திரம் கொடுக்க கூடிய ஒரு நிச்சயத்தோடு இலக்கை நோக்கி போவதை உணருகிறோம்; தேவனுக்கு செய்த ஊழியத்திற்கான பலனை பெறும்படி கிறிஸ்துவின் ஞாயாசனத்திற்கு முன்பாக சென்று, ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தில் பங்கு பெற்றிடுவோம். வெளிப்படுத்தல் 19ல் சொல்லப்பட்டிருக்கும் விவரங்களை கண்டு வியப்படைகிறேன் விசுவாசிகள் கல்யாணத்தில் வெள்ளை அங்கிகளை பெறுகிறார்கள், வெளிப்படுத்தல் பத்தொன்பது எட்டு. அதற்கு சில வசனங்களுக்கு பின்பு, வசனம் பதினாலு., ஜனங்கள் வெள்ளை அங்கிகளை அணிந்துகொண்டு, ஜெய தொனியோடு பரலோகத்தில் இருந்து புடப்பட்டு வருகிறார்கள், வெளிப்படுத்த புத்தகத்தில் அது இரட்சிப்பிற்கும் நீதிக்கும் அடையாளமாக இருக்கிறது. வேறுவிதமாக சொன்னால், பலனை பெற்றுக்கொள்ள நாம் பிதாவின் வாசஸ்தலத்திற்கு செல்ல வேண்டும்,

கல்யாணத்திற்கு செல்ல வேண்டும், அவர் ஜெயதொநியோடு மறுபடியும் வருவதற்கு முன் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். அதனாலதான் சபைக்கு இது அவசியமாக இருக்கிறது, கிறிஸ்துவின் மணவாட்டி, விசுவாசிகளாகிய சரீரம், முதலாவது பிதாவின் வீட்டிற்கு அழைத்து செல்லப்பட வேண்டும் – மீண்டும் வருவதற்கு அங்கு ஆயத்தமாக்கப்படும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ரான், கடந்த வாரம் நிகழ்ச்சியை பார்க்காதவர்களுக்காக சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். 1 தொசலோநிகெயர் நான்கையும் சேர்த்துகொல்ல்லுங்கள், பவுல் தெசலோனிக்கேய சபைக்கு என்ன சொல்கிறார், 1 கொரிந்தியர் 15ல் கொரிந்து சபைக்கு என்ன சொல்கிறார், இயேசு கிறிஸ்து யோவான் பதினான்காம் அதிகாரத்தில் என்ன சொல்கிறார். இது எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்து இருக்கிறது அருமையான விஷயத்தை சொல்கிறது. அதை சுருக்கமாக விளக்கி சொல்லுங்க.

**Dr.ரான் ரோடஸ்**: சரி, இதெல்லாம் எப்படி அழகாக பொருந்துகிறது என்று சொல்வது அருமையான காரியம். 1 தெசலோனிகேயர் நான்காம் அதிகாரம் எப்படி பரலோகத்தில் இருந்து இயேசு வருவார் மேகங்கள் மீது வருவார், எப்படி, மேகங்கள் சூழ வருவார், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பார்கள் என்று சொல்கிறது. உயிரோடு இருக்க நாம் அனைவரும் ஒரு நொடி பொழுதில் மருரூபமாகி மகிமையின் சரீரத்தை பற்று உடனடியாக மேகங்கள் மீது கர்த்தரோடு எடுத்துகொள்ளபப்டுவோம். அதாவது, இது யோவான் பதினாலும் பார்ப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது என்று நினைக்கிறேன், ஏன்னா யோவான் பதினாலில் இயேசு சொல்கிறார், “உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ண போகிறேன், நான் மறுபடியும் வந்து உங்களை என்னதோ கூட்டி கொண்டு செல்வேன், நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருப்பீர்கள்.” இதை மொழிபெயர்த்தால், என்னிடத்தில் சேர்த்துகொள்வேன் என்று வரும் .” அதாவது இந்த வார்த்தை 1 தெசலோனிக்கேயர் நான்கு பதினாறு பதினேழு வசனங்களில் இருப்பதை பார்க்க முடியும்.

சரி, இந்த மருரூபமகுதல் என்றால் என்ன? சரி, இதை பற்றி பவுல் நமக்கு விளக்கம் தருகிறார் 1 கொரிந்தியர் 15:50-52. உண்மை என்னவென்றால் நாம் மாறிடுவோம். அழிவுள்ளது அழியாமையை தரித்துகொள்ளும். சாவுக்கேதுவானது சாவாமையையும் தரித்துகொள்ளும். அதாவது, அந்த வசனங்களுக்கு முன்பாக சொள்ளபப்ட்டிருக்கிறது மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது இல்லை. இதற்கு என்ன அர்த்தம் என்றால் அழிவுள்ள மாம்சமுள்ளவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. ஆனால் மகிமையுள்ள சரீரம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும், அதுதான் எடுத்துகொள்ளபப்டுதலில் நடக்கிற முக்கிய மாற்றமாக இருக்கும். நற்செய்தி என்னவென்றால், நான் ஏற்கனவே சொன்னதுபோல, நித்தியமாக இயேசுவோடு அவரை முகமுகமாய் பார்க்கும்படியாக அதற்கு ஏற்ற சரீரங்களை நாம் பெற்றுகொள்வோம். இந்த பகுதிகளை சொல்கிறபடி நாம் மறுபடியும் அவருடைய பிரசன்னத்தில் இருந்து ஒரு நாளும் விலகி சென்றிட மாட்டோம். இதை கேட்டால் கொண்டாடாமல் இருக்க முடியுமா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: அருமையான ஒன்று. எட், ஜனங்கள் இதை தவற விட விரும்பமாட்டார்கள். எடுத்துகொள்ளபாடுதல் எப்போது வண்டுமானாலும் சம்பவிக்கும், அதை பற்றிதான் நாம் அடுத்த வாரம் பேசிட இருக்கிறோம். அது எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்குமா? அதினால் தான் அது எதிர்பாராமல் நடக்கும் நிகழ்வு எனப்படுகிறதா, சரியா? அது இப்போது கூட நடக்க வாய்ப்பிருக்கலாம், எந்த நிமிடத்தில் வேண்டுமானாலும் சம்பவிக்கும், விசுவாசிகளாக இல்லாதவர்கள், கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் அறிந்திருப்பதில்லை – அறிவுபூரவமாக அவரை பற்றி தெரியும், மற்ற விதங்களில் அவரை பற்றி தெரிந்திருக்கலாம், ஆனா திப்பட்ட விதத்தில் தெரியாது- அப்ப கிறிஸ்து வரும்போது, அவர்கள் கைவிடப்பட்டவர்களில் ஒருவராக இருக்க கூடும். கிறிஸ்துவோடு போவேன் என்ற நிச்சயத்தை அவர்கள் பெற்றுகொள்வது எபப்டி. கிறிஸ்து அவர்களை சேர்த்துகொல்வாரா?

**Dr. எட் ஹின்ட்சன்**: இங்க வேதாகமம் தெளிவான போதனையை எடுத்து சொலுகிறது என்று நினைக்கிறேன். இயேசு மறுபடியும் வருகிறார். கேள்வி

என்னவென்றால், அவர் உங்களுக்காக வருகிறாரா? இதற்கான விடை கிறிஸ்து உங்களுடைய பாவங்களுக்காக மரித்தார் என்ற உங்களுடைய விசுவாசத்தின் அளவை பொறுத்து இருக்கிறது. இயேசு தாம் சொன்னபடியே இருக்கிரிஆரா? உங்களுக்காக அவர் மரித்து, மரணத்திலிருந்து உயிர்த்தாரா. அவர் மீண்டும் வருகிறாரா? இதெல்லாம் உண்மையாக இருந்தால், விசுவாசத்தை நித்தியத்தின் நிச்சயத்தோடு அவர் உங்களுக்காக செய்த காரியத்தின் அடிப்படையில் விசுவாசிக்கிறேன் என்றிடுங்கள் நீங்கள் இரட்சிக்கப்பட்டிருகிறீர்கள், முத்திரிக்கப்பட்டு இருக்கிறீர்கள், எக்காளம் ஊதப்படும்போது போக ஆயத்தாமாக இருக்கிறீர்கள், பிரதான தூதரின் தொனி, தேவன் விசுவாசிகளை பரலோக வீட்டிற்கு வரும்படி அழைக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி, நேயர்களே, அடுத்த வாரம் உங்களை ஒரு கேள்வி கேட்க இருக்கிறோம், அதற்கான பதில் வேதாகமத்தில் இருக்கிறது, இயேசு எப்போது வேண்டுமானாலும் வருவார் என்று ஆதி திருச்சபையினர் சொன்னதற்கு காரணம் என்ன? சரியா? அதற்கு நிறைய வசனங்கள் இருக்கிறது. அதில் சிலவற்றைத்தான் நாம் பார்க்க இருக்கிறோம், அதில் எடுத்துகொள்ளப்படுதல் என்ற இந்த நிகழ்வு எப்போது வேண்டுமானாலும் சம்பவிக்கலாம் என்பதை பற்றியும் நாம் பார்க்க இருக்கிறோம். அது இன்றைக்கு கூடு நடக்கலாம். அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் ;துயுளாழற.ழசப

;2015 யு.வு.சு.ஐ.